ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1686/52 - 2011 ජනවාරි 01 වැනි සෙනසුරාදා - 2011.01.01

*1686/52 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.–பீ. 10/2009.*

***(423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்***

7 ஆம் பிரிவின் கீழான கட்டளை

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரின் பணிப்புரைக்கமைய மேற்படி சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் நியதிகளின்படி இத்தால் பின்வருமாறு அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(1) கீழேயுள்ள (2) ஆம், (3) ஆம் பந்திகளின் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய ஏதேனும் கிளையை, இணைப்பலுவலகத்தை, சந்தைப்படுத்தல் முகவராண்மையை, கருத்திட்ட முகவராண்மையை அல்லது ஏனைய ஒத்த அலுவலகங்களை (இதனகத்துப்பின்னர் "கடல் கடந்த அலுவலகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைத்துப் பேணுவதன் நோக்கத்திற்கு அனுமதி தேவைப்படுமிடத்து இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்குக் கொடுப்பனவு செய்வதற்கு 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனிக்கு அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் பங்காண்மைக்கு இத்தால் அனுமதி அளிக்கப்படுகின்றது.

ஆயினும், இது பின்வருவன தொடர்பில் ஏற்புடையதாகமாட்டா :-

(i) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட ஏதேனும் கம்பனிக்கு ;

(ii) ஏதேனும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்பிற்கு ;

(iii) (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எந்தக் கம்பனிக்கு அல்லது பங்காண்மைக்கு எதிராகக் கோப்பிடப்பட்ட வழக்கொன்று தொடர்பில் அந்த ஏதேனும் கம்பனிக்கு அல்லது பங்காண்மைக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முடிவுறாதிருக்கின்றனவோ அந்த ஏதேனும் கம்பனிக்கு அல்லது பங்காண்மைக்கு.

(2) எந்தக் கம்பனிகள் அல்லது பங்காண்மைகள் தொடர்பில் (1) ஆம் பந்தியின் கீழ் அளிக்கப்பட்ட அனுமதி ஏற்புடைத்தாகின்றதோ அந்தக் கம்பனிகளும் பங்காண்மைகளும் –

(i) இலங்கைக்கு வெளியே தொழிலிடமொன்றை நிறுவுதல் தொடர்பான சாத்தியக்கூறு பற்றிய அறிக்கையொன்றுடன் சேர்த்து அத்தகைய விதப்புரை வழங்கப்படும் நேரத்தில் தொழில் முறையில் ஈடுபடுவதற்குச் செல்லுபடியான சான்றிதழொன்றை வைத்திருக்கும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர் ஒருவரால் விதப்புரை செய்யப்பட்ட வேண்டுகோளொன்றை அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் ;

(ii) ஓராம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியால் வழங்கப்படக் கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்ட வெளிச்செல் முதலீட்டுக் கணக்கிலிருந்து மாத்திரமே வெளிச்செல் அனுப்புத் தொகைகளை அனுப்புதல் வேண்டும் எனவும் ;

(iii) கொடுப்பனவுத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் எவையேனும் கடல்கடந்த அலுவலகங்களிலிருந்து எல்லா இலாபங்களையும் ஒப்படைப் பணங்களையும் மிகை நிதிகளையும் எந்த வெளிச்செல் முதலீட்டுக் கணக்கின் ஊடாக ஆரம்ப முதலீடு செய்யப்பட்டதோ அந்த வெளிச்செல் முதலீட்டுக் கணக்கின் ஊடாக மாத்திரமே இலங்கைக்குத் திருப்பியனுப்புமாறும் ;

(iv) உட்பந்தி (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வேண்டுகோள் ஒவ்வொன்றுடனும் அதன்கண் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்கு அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் வணிகர் ஊடாக வெளிச்செல் அனுப்புதொகை எதுவும் அனுப்பப்படவில்லை எனக் குறிப்பிடும் சத்தியக் கடதாசியொன்றைச் சமர்ப்பிக்குமாறும் ; அத்துடன்

(v) செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகரால் தேவைப்படுத்தப்பட்ட எல்லா இயைபான தகவலையும் ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறும்,

பணிக்கின்றேன்.

(3) ஓராம் பந்தியின் கீழ் அளிக்கப்பட்ட அனுமதியைப் பின்பற்றி செய்யப்படும் எல்லாக் கொடுப்பனவுகளும் ஒரு இலட்சம் அமெரிக்க டொலரை ($ 1,00,000) அல்லது நிர்ணயிக்கப்பட்ட எவையேனும் வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையை விஞ்சுதலாகாது

எனக் குறித்துரைக்கின்றேன் :

ஆயின், அத்தகைய அனுமதியைப் பின்பற்றிச் செய்யப்படும் ஏதேனும் கொடுப்பனவு மேற்கூறப்படும் வரையறையை விஞ்சுமாயின் செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியின் முன் அனுமதி பெறப்படுதல் வேண்டும் எனக் குறித்துரைக்கின்றேன்.

இந்த அறிவித்தலின் நோக்கத்திற்கு "இலங்கைக்கு வெளியே வதிவுள்ளவர்" என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 1972 ஏப்பிறல் 21 ஆந் திகதி கொண்ட 15007 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பணிப்புகளில் அச்சொல்லமைப்பிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருக்கும்.

பி. எச். ஓ. சந்திரவன்ச,
செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி.

கொழும்பு 1,
2011, சனவரி 01.

1- 135

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.